**மில்கோ தனியார் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2023**

---

மில்கோ தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதிய கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களானது சட்ட விதிகளின் மூலம் காட்டப்படக்கூடிய வகையில் காலப்பகுதிக்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1) (ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களானது தேவையான வேளைக்குள் தயாரிக்கப்படுகின்றது என்பதனை சான்றுபடுத்த வேண்டியதுடன் இதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டு கையேட்டின் பந்தி இலக்கம் 6.6 இற்கு இணங்க கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை 2024 நவம்பர் 20 ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் சில தாமதங்கள் உள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் தற்பொழுது 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்களையும் வரைபு அண்டறிக்கையையும் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 தொழிற்சாலைகளின் இலாப நட்ட நிலைமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|

கம்பனியின் கீழ் காணப்படுகின்ற 05 தொழிற்சாலைகளுக்கு மத்தியில் திகன, அம்பேவல, கொழும்பு, பொலன்னறுவை ஆகிய 04 தொழிற்சாலைகளில் பால் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்படுவதுடன் பொல்கஹவெல தொழிற்சாலையில் கால் நடை உணவு தயாரிக்கப்படுகின்றது. தொழிற்சாலைகளின் இலாப நட்ட நிலைமை பின்வருமாறாகும்.

| தொழிற்சாலைகள் | 2021 | 2022<br>(வரைபு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்) | 2023 |
|---|---|---|---|
| அம்பேவல | (84,540,671) | 344,160,692 | 405,754,087 |
| பொலன்னறுவை | 336,334,916 | (169,271,616) | 166,785,984 |
| திகன | (55,533,416) | (514,941,217) | (69,804,663) |
| கொழும்பு | 242,872,200 | (304,129,608) | 76,527,488) |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்குச் சொந்தமான பொலன்னறுவை மற்றும் கொழும்பு பால் தொழிற்சாலைகளில் 2021 ஆம் ஆண்டில் இலாப நிலைமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது இரண்டு தொழிற்சாலைகளிலும் குறிப்பிடத்தக்க அளவான நட்ட நிலமை அறிக்கையிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது மீண்டும் இலாப நிலைமை வரை முன்னேற்றமடைந்திருந்தும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அடைந்துபொள்ளப்பட்டிருந்த இலாபத்தன்மையானது 50 சதவீதம் மற்றும் 68 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | பொலன்னறுவை, திகன மற்றும் கொழும்பு ஆகிய தொழிற்சாலைகளின் நட்டத்தினை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிக அளவில் அதிகரித்திருந்தது. இதற்கு பிரதான காரணமாவது 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் மூலப் பொருட்களும் பொதியிடல் பொருட்களும் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் பொருட்களினதும் விலை நாளாந்தம் அதிகரித்ததனால் உற்பத்திக் கிரயம் அதிக அளவில் உயர்வடைதலும் இவ்வாறு உயர்வடைந்த உற்பத்திக் கிரயத்துக்கு ஒப்பீடாக பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையாகும். மேலும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்த பால் லீற்றர்களின் அளவு தொடர்ச்சியாக குறைவடைதல் அறிக்கையிடப்பட்டிருந்ததனால் அது நிறுவனத்தின் | நிறுவனத்தின் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உற்பத்தி இயலளவு குறைவடைவதற்கு தாக்கமளித்ததுடன் அது நிறுவனத்தின் இந்த ஆண்டுகளின் இலாபம் தொடர்பாக தாக்கமளித்துள்ளது. | |
| (ஆ) திகன பால் தொழிற்சாலை 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக நட்ட நிலைமையை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அந்த நிலைமை ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணங்களை ஆராய்ந்து பார்த்து தொழிற்சாலையை இலாப நிலைமைக்கு மாற்றுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலப்பொருட்களின் விலை அதிகரித்தலின் காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்தலும் அதற்கு நேரொத்த வகையில் பொருட்களின் விலை அதிகரிக்காமையும் மற்றும் விவசாயிகளின் பால் உற்பத்தி குறைவடைதலும் இதற்கு பிரதான காரணமாக இருந்தது. | இத் தொழிற்சாலைகள் நட்டமடைவதற்கு பிரதானமாக தாக்கமளிக்கும் விடயத்திற்கு கவனம் செலுத்தி இலாபத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 விகிதாசார பகுப்பாய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|

கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான சிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த 04 ஆண்டுகள் தொடர்பாக கணிப்பீடு செய்யப்பட்ட கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| விகிதாசாரம் | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.35 | 1.091 | 1.52 | 1.99 |
| விரைவு விகிதம் | 0.67 | 0.62 | 0.79 | 0.89 |
| மொத்த இலாப விகிதம் | 1.95% | 3.84% | 12.62% | 9.48% |
| தேறிய இலாப விகிதம் | (5.88%) | (8.36%) | 2.03% | 0.275% |
| கடன்பட்டோர்டகளிடமிருந்து சேகரிக்கும் காலம் | 28 நாட்கள் | 27 நாட்கள் | 22 நாட்கள் | 15 நாட்கள் |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கம்பனியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை உயர் மட்டத்திற்குச் சென்றிருந்தும் சிறந்த மட்டத்தினை அடைந்திருக்கில்லை என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க சபையில் தொழிற்படு மூலதன பிரச்சினை உள்ளது என அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிறுவனத்தின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டினை சிறப்பாக பேணுதல் வேண்டும். |
| (ஆ) மொத்த இலாப விகிதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அதிகரித்திருந்தும் 2021 ஆம் ஆண்டின் போது 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் தேறிய இலாப விகிதம் 2020 ஆம் ஆண்டில் சாதகமான நிலைமையை காட்டியிருந்தும் 2021 ஆம் ஆண்டின் போது மீண்டும் 86 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கிணங்க கம்பனியின் இலாப நட்ட நிலைமையானது தொடர்ச்சியாக முரணானவை என அவதானிக்கப்பட்டது. | உற்பத்திக்கிரயம் அதிகரித்தலுடன் ஒப்பிடுகையில் பொருட்களின் விலை அதிகரிக்காமையின் காரணமாக மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் குறைவடைந்துள்ளது. | நிறுவனத்தின் இலாபத்தன்மையை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடன்பட்டோர்களிடமிருந்து பணத்தை சேகரிக்கும் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு சாதகமான நிலைமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் ஐந்து ஆண்டுகளை மிகைத்த மீதிகளைச் சேகரித்தல் சம்பந்தமாக தாமத நிலைமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 01/2014 ஆம் இலக்க 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் நிதி ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வணிக செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதில் வருடாந்த பாதீடு உத்தேசிக்கப்பட்ட பிரதான முதலீடுகள், இயலளவினை விரிவுபடுத்துதல், பிரதான பெறுகைகளை உள்ளடக்கிய வருடாந்த பெறுகைத் திட்டம், மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் முதலிய தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2023 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேலே குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாத்திரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிற்கான மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய அறிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம், வருடாந்த பாதீடு முதலியவற்றை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் கம்பனியால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பாலினை பொறுப்பேற்கும் நடவடிக்கையை டிஜிடல் மயப்படுத்துதல், திகன தொழிற்சாலையில் குளிரூட்டியினை நிர்ணயித்தல், அம்பேவல தொழிற்சாலையின் கழிவுநீர் சுத்திகரிப்பின் இரண்டாம் கட்டத்திற்காக ஆரம்ப நடடிக்கையினை மேற்கொள்ளுதல், பொலன்னறுவை தொழிற்சாலையின் இயந்திர நிலைய கட்டிடத்தினை திருத்தம் செய்தல் ஆகிய செயற்பாடுகளின் பௌதீக | தேவையான நிதிஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் சிக்கலும், ஆண்டின் நடுப்பகுதியில் நிறுவனத்தை மீளமைப்புச் செய்வதற்கு அமைச்சரவையினால் எடுத்த தீர்மானத்தின் காரணமும் மூலதனச் செலவுகளை உள்ளடக்கி அச்செயற்திட்டங்களின் எதிர்பார்த்த பௌதீக இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்முன்னேற்றத்தினை எதிர்பார்த்த வகையில் அடைந்து கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | | |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த 19 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 07 நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளல் 50 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கம்பனிக்குச் சொந்தமான பண்ணைகளை ஆரம்பித்தல், அம்பேவல தொழிற்சாலையின் பழைய படர் தொழிற்சாலையின் தளத்தை புனரமைப்புச் செய்தல், வினைத்திறனாக சந்தைப்படுத்தல் திட்டத்தினை தயாரித்து அமுல்ப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளல் 10 சதவீதமாக இருந்ததுடன் திட்டமிடப்பட்ட இன்வொயிஸ்கள் மற்றும் விற்பனைகளை பகிர்ந்தளிக்கும் முறைமையை தன்னியக்கப்படுத்தும் செயற்பாட்டின் பௌதீக செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளல் 05 சதவீதமாகும். | ஆண்டில் காணப்பட்ட நிதிச் சிக்கல், முகாமைத்தவம் அடிக்கடி எடுத்த தீர்மானம், முன்னுரிமை வழங்கிய ஒழுங்குமுறைமைக்கு இணங்க திட்டமிடப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் சிக்கலானதாகும். | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் கம்பனியால் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்கு பிரதான பெறுகைத் திட்டத்தினைத் தயாரித்து அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டமானது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் வழக்கமாக நாளதுவரையாக்கிய பெறுகைத் திட்டம் சபையினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான விடயங்களை உள்ளடக்கிய பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்காக பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுதல் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பதப்படுத்தாத பாலை சேகரிக்கும் பிராந்திய செயற்திட்டத்திற்கு இணங்க 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் போது நுவரெலியா வலயத்தினை தவிர்த்து ஏனைய 09 வலயங்களில் பதப்படுத்தப்படாத பாலை சேகரித்தலில் 7,831,666 லீற்றர் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுகையில் 2022 ஆம் ஆண்டில் அனைத்து பிராந்திய வலயங்களில் பதப்படுத்தாத பாலைச் சேகரித்தல் 20,408,863 லீற்றர்களால் குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் பால் குறைவடைவதற்கு போட்டி பால் சேகரிப்பாளர்கள் பால் தொழிற்சாலைக்கு சேகரித்தலும் அவர்களால் பாலின் தரத்தை கருத்தில் கொள்ளாது பாலை கொள்வனவு செய்தலும் காரணமாகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் பால் குறைவடைவதற்கு ஏனைய போட்டியாளர்களுக்கு நேரொத்த வகையில் சரியான காலப்பகுதியின் போது மில்கோ நிறுவனத்தினால் பாலின் விலையை அதிகரிப்பதற்கு தவறியிருந்தமை அடிப்படைக் காரணமாகும். | உற்பத்திற்கு தேவையான பதப்படுத்தாத பாலை கொள்வனவு செய்வதற்காக முறையான ஒரு வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உற்பத்திப் பொருட்களின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் சுவை!ட்டப்பட்ட பால், தயிர், சீஸ் என்பவற்றை தவிர்த்து ஏனைய உற்பத்திப் பொருட்களில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் போது திரவப்பால், யோகட், வெண்ணை ஆகிய உற்பத்திப்பொருட்கள் குறைவடைந்திருந்தது. | உற்பத்திக்கான அடிப்படை மூலப்பொருளான பசும்பாலினை சேகரித்தல் குறைவடைவதற்கு ஒப்பீடாக உற்பத்தியும் குறைவடைந்துள்ளது. | உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விற்பனைகளின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் UHT பால், ஸ்டீரியலயிஸ்ட் பால், யோகட், ஐஸ்கிரீம், வெண்ணை, சீஸ், பட்டர், பால்மா அமுக்கப்பட்ட பால் என்பவற்றின் விற்பனையில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் போது தயிர், ஐஸ்கிரீம், சீஸ், பால்மா என்பவற்றைத் தவிர்த்து ஏனைய உற்பத்திப் பொருட்களின் விற்பனைகள் அதிக அளவில் குறைவடைந்திருந்தது. | உற்பத்திக்கு நேரொத்த வகையில் விற்பனைகளின் அளவும் குறைவடைந்துள்ளது. | உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | எதிர்பார்த்த சந்தைப் பங்கினை அடைந்து கொள்வதற்காக எதிர்பார்த்த வெளியீட்டினை உற்பத்தி செய்வதற்கு தேவையான பிரதான உள்ளீடாகிய பாலின் அளவு நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவினை கொள்வனவு செய்ய வேண்டியது அத்தியாவசியமான விடயமாக இருந்த போதிலும் கம்பனியால் தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாலை கொள்வனவு செய்தல் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மறையே 09 சதவீதம், 13 சதவீதம் மற்றும் 08 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை | உற்பத்திக்குத் தேவையான பசும்பாலினை கொள்வனவு செய்வதற்காக முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்படல் வேண்டும். |

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| எதிர்பார்த்த திரவப்பாலின் அளவு (லீற்றர்) | 96,551,000 | 66,629,000 | 59,342,000 |
| கம்பனியால் திரவப்பாலினை சேகரித்தல் (லீற்றர்) | 67,905,259 | 47,496,397 | 39,775,076 |
| குடித்தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பிரகாரம் ஒட்டுமொத்த திரவப்பால் உற்பத்தி (லீற்றர்) | 513,305,478 | 506,449,602 | 504,153,360 |
| சேகரிக்கும் செயல்முன்னேற்றமானது ஒட்டுமொத்த திரவப்பால் உற்பத்தியின் சதவீமாக | 13.22 | 9.38 | 7.9 |

| | | | |
|---|---|---|---|
| (i) | கம்பனியால் சேகரிக்கும் திரவப்பாலின் அளவு 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் போது அந்த குறைவடைதல் 7,721,321 லீற்றர் அல்லது 16.2 சதவீதமாகும். | 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் பால் குறைவடைவதற்கு போட்டியான பால் சேகரிப்பாளர்கள் பால் தொழிலுக்கு சேர்ந்து கொள்வதும் அவர்களினால் பாலின் தரத்தில் கவனம் செலுத்தாது பாலினை கொள்வனவு செய்வதும் காரணமாகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் பால் குறைவடைவதற்கு ஏனைய போட்டியாளர்களுக்கு நேரொத்த வகையில் சரியான கால எல்லையின் போது மில்கோ நிறுவனத்தினால் பாலின் விலையை அதிகரிப்பதற்கு | உற்பத்திக்குத் தேவையான பசும் பாலினை கொள்வனவு செய்வதற்காக முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தவறியிருந்தமை அடிப்படைக் காரணமாகும். | |
| (ii) | நாட்டின் ஒட்டுமொத்த திரவப்பால் உற்பத்தியானது கம்பனியால் சேகரிக்கும் திரவப்பாலின் அளவின் சதவீதத்திற்கு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அந்த சதவீதம் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை படிப்படியாக குறைவடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் அந்த சதவீதம் 9.38 சதவீதமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது அது 7.9 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் பால் குறைவடைந்தமைக்கு ஏனைய போட்டியாளர்களுக்கு நேரொத்த வகையில் சரியான காலப்பகுதியின் போது மில்கோ நிறுவனத்தினால் பாலின் விலையை அதிகரிப்பதற்கு தவறியிருந்தமை அடிப்படைக் காரணமாகும். | உற்பத்திக்குத் தேவையான பசும் பாலினை கொள்வனவு செய்வதற்காக முறையான ஒரு வேலைத்ததை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான திரவப்பாலின் அளவு 20,705,024 லீற்றர்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது திரவப்பால் விற்பனை அளவு 16,012,534 லீற்றர்களாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது திரவப்பால் விற்பனையின் அளவு 13,258,335 லீற்றர்களாக இருந்ததனால் படிப்படியாக திரவப்பால் விற்பனை குறைவடைந்திருந்தது. நிகழகாலத்தில் பால் சந்தையின் போக்கு திரவப்பால் பயன்பாடாக இருந்த போதிலும் அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தி திரவப்பாலின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஒட்டுமொத்த பால் உற்பத்தி குறைவடைவதற்கு நேரொத்த வகையில் திரவப்பால் உற்பத்தியும் குறைவடைந்துள்ளது. | விற்பனைகளை அதிகரிக்கச் செய்வதற்கு முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஊ) | படல்கம பால் செயன்முறைப்படுத்தல் தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்கு ரூபா 9,718,217,432 (யூரோ 63,935,641) ஒப்பந்த பெறுமதிக்கு 2015 ஆம் ஆண்டில் ஒரு வெளிநாட்டு ஒப்பந்த கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதனை 2019 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்துவதற் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய காலப்பகுதியில் செயற்றிட்டத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக தற்பொழுது தொழிற்சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழிற்சாலைக்கு மின்சார வழங்கலினைப் ெற்றுக்கொள்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட ட்ரான்ஸ்போமர் நாளாந்தம் 24 மணித்தியாலங்களும் செயற்படும் நிலையில் பேணப்பட வேண்டியிருந்ததனால் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறாதிருந்தும் தொழிற்சாலையினால் மாதாந்தம் குறிப்பிடத்தக்க அளவான கிரயம் மின்சாரத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியான 2022 பெப்ரவரி மாதத்திலிருந்து 2024 !ன் மாதம் வரை ரூபா 12,079,005 மொத்த தொகையான மின்சார செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொழிற்சாலையின் மாதாந்த மின்சார செலவில் 2/3 பங்காகும். அவ்வாறே | இச் செயற்திட்டத்தின் வேலைகளை மேற்கொள்வதற்கு 3 phase மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதலானது ட்ரான்ஸ்போமரினூடாக மேற்கொள்ளப்படுகின்றது இச்செயற்திட்டத்தின் வேலைகள் இடம்பெறுகின்ற காலப்பகுதியில் இதன் மின்சார விலைப்பட்டியல் முழுவதும் செலுத்தப்படுவது டெஸ்மி கொன்ஸ்ட்ரக்சன் ஏ/எஸ் கம்பனியின் மூலமாகும். தற்பொழுது இச் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் எங்களின் பொறியியலாளர்கள் செயற்திட்டத்தின் உத்தியோகபூர்வ | நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்து உற்பத்தியை ஆரம்பிப்பது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அண்ணளவாக மாதாந்தம் ரூபா 200,000 இற்கு மெற்பட்ட கிரயத்தினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்நது. செயற்பாட்டு நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படாததன் காரணமாக அந்த செலவு செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் மின்சார செலவுகளும் கிக்கனமற்ற செலவாக இருந்தது. | இல்லங்களையும் கட்டிடங்களையும் பயன்படுத்துவதனால் அவற்றிற்குரிய மின்சார விலைப்பட்டியல் எங்கள் நிறுவனத்தினால் செலுத்தபடுகின்றன. இதில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தி தனியார் பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து இச்செயற்திட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு செலவானது இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தும் வரை எங்களால் மேற்கொள்ளப்படுவதுடன் இச்செயற்திட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மெற்கொள்ளப்படும் வரை இச் செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. | |
| (எ) | படல்கம புதிய பால் தொழிற்சாலையின் நிர்மாணங்களில் நிருவாக மற்றும் அலுவலக கட்டிடங்கள் 2021 மார்ச் 24 ஆந் திகதியும், தொழிற்சாலை பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் 04 சிரேஸ்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் 2021 திசெம்பர் 15 ஆந் திகதியும் 05 கனிஷ்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் 2020 சனவரி 22 ஆந் திகதியும், மில்கோ நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் !ன் மாதமளவில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. 2023 யூன் மாதத்திலிருந்து 2023 ஒக்தோபர் மாதம் வரை சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக இரண்டு வேலையாட்கள் அல்லது மூன்று வேலையாட்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் தொழிற்சாலையின் பௌதீக பரீட்சிப்பு திகதியான 2024 யூலை 04 ஆந் திகதி வரை எந்த ஊழியரும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரீட்சிப்பு திகதி வரை நிருவாக மற்றும் அலுவலக கட்டிடங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து உத்தியோகபூர்வ இல்லங்களும் முறைப்படியாக பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணமாக அவற்றின் உட்பக்கங்களிலும் கூட களைகளும் கொடிகளும் வளர்ந்து பல்வேறு கிருமிகள் மற்றும் | படல்கம பால் தொழிற்சாலை செயற்திட்டம் “TURNKEY” நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்திட்டம் ஆனதுடன் இந்த நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களானது செயற்திட்டம் முழுவதும் முடிவடைந்து உரிய உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கும் வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிருவகிப்பது அவற்றினை நிர்மாணிப்பதற்கு அனுமதியை பெற்ற கம்பனியாகும். அதற்கிணங்க இச் செயற்திட்டத்தின் முழு | நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வது சம்மந்தமாக பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டியதுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை பராமரித்து முறைப்படியாக பேணுவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எலிகள் போன்ற உயிரினங்களின் வதிவிடமாக மாறியிருந்தது எனவும் சில உத்தியோகபூர்வ இல்லங்களிலுள்ள செடிகள் பொருட்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது டெஸ்மி கன்ஸ்ட்ரக்சன் ஏ/எஸ் கம்பனியின் மூலமாகும். 2022.04.12 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்காக இலங்கை மத்திய வங்கி எங்கள் நாட்டை ஒரு வங்குரோத்து நாடாக வெளிப்படுத்தியதோடு வெளிநாட்டுக் கடனை செலுத்துதல் நிறுத்தப்பட்டதன் காரணமாக இச் செயற்திட்டத்தின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எங்களால் இந்நிலைமை சம்மந்தமாக தற்போதைய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும் முறைமை தொடர்பாக உத்தியோகபூர்வமான தீர்மானம் எங்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை துப்பரவு செய்தல் அதே போல ஏனைய நடவடிக்கைகளும் தற்பொழுது இடம்பெறவில்லை. எனினும் எங்களால் நாளாந்த அடிப்படையில் பணத்தை செலுத்தி இக்கட்டிடம் மற்றும் வீடுகளை துப்பரவு செய்யும் நடவடிக்கை அவ்வப்போது மெற்கொள்ளப்படுகின்றது. இந் நடவடிக்கை எதிர்காலத்தில் இடம்பெறும் என குறிப்பிடுதல் வேண்டும். | |
| (ஏ) | படல்கம பால் செயன்முறைப்படுத்துதல் தொழிற்சாலையில் உள்ளடக்கப்பட்டிருந்த பால் உற்பத்திக் கட்டிடத்தின் மின்சுற்றுக்கு | பால் தொழிற்சாலை கட்டிடத்தின் பிரதான மின்சுற்று | நிர்மாண நவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்வதன் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்புபடுத்தப்பட்டிருந்த UPS முறைமையினை பூரணப்படுத்தி 2024 ஆம் ஆண்டளவில் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அந்த முறைமையில் மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக 100 பெற்றரிகளுக்கு மேற்பட்ட அளவானவை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2024 !லை 01 ஆந் திகதியளவில் அந்த பெற்றரிகளின் ஆயுட்காலம் முடிவடைந்திருந்ததனால் தொழிற்சாலைகளின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மீண்டும் அந்த பற்றரிகள் மீளமைப்புச் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அதற்காக ஒரு பெற்றரிக்காக ரூபா 60,000 இற்கு மேற்பட்ட கிரயத்தினை செலவு செய்ய வேண்டியிருந்தது எனவும் அதற்கிணங்க இதற்காக அண்ணளவாக ரூபா 6,000,000 கிரயத்தினை செலவு செய்ய வேண்டியிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | முறைமைக்குரிய UPS முறைமையில் பெற்றரி பொருத்தப்பட்டு தற்பொழுது 04 ஆண்டுகளை அண்மித்துள்ளது. அதன் மின் அர்ப்பணிப்பு ஆற்றல் குறைவடைவதற்குரிய இயலுமை காணப்பட்டிருந்தும் இச் செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் UPS முறைமையின் பெற்றரிகளை புதிதாக பொருத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுமாயின் அந்த நிலைமைக்கு இணங்க மில்கோ நிறுவனம் டெஸ்மி கன்ஸ்ட்ரக்சன் கம்பனியுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும். | செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற மேலதிக செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | தொழிற்சாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்களிலுள்ள பெற்றரிகளின் ஆயட்காலம் முடிவடைந்திருந்தது. அதன் காரணமாக தொழிற்சாலையின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மீண்டும் அந்த பெற்றரிகளை புனரமைப்புச் செய்ய வேண்டும் எனவும் அதற்காக ஒரு பெற்றரிக்கு ரூபா 100,000 இற்கு மேற்பட்ட தொகையை செலவு செய்ய வேண்டும் எனவும் அதற்கிணங்க அண்ணளவாக ரூபா 400,000 இற்கு மேல் செலவு செய்ய வேண்டி ஏற்படும் எனலம் அவதானிக்கப்பட்டது. | படல்கம தொழிற்சாலையில் ஸதபாபிக்கப்பட்டுள்ள இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரத்திலுள்ள மின் அர்ப்பணிப்பு பெற்றரிகளின் ஆயட்காலம் தற்பொழுது முடிவடைந்திருந்தும் இச்செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பித்ததன் பின்னர் தேவைப்பாட்டின் அடிப்படையில் இற்த புதிய பெற்றரிகளை பொருத்துதல் அந்த நிலைமைக்கு இணங்க மில்கோ நிறுவனம் டெஸ்மி கன்ஸ்ட்ரக்சன் கம்பனியுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும். | நிர்மாண நவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்வதன் மூலம் செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற மேலதிக செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1980 மார்ச் 10 ஆந் திகதி அளவீடு செய்யப்பட்ட 4754 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் பிரகாரம் அம்பேவெல தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கும் சொந்தமான காணி 40 ஏக்கர் 01 ரூட் 36 பேச்சஸ்கள் ஆனதுடன் அதில் கம்பனியால் ரூபா 5,548 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள் மற்றும் பொருத்திகளட உள்ள போதிலும் இக்காணியின் உரிமையை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கம்பனிக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு உரிமை வழங்கப்படாதிருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. காணியின் உரிமையை ஒப்படைப்பது தொடர்பான வேண்டுதல்கள் அமைச்சின் மூலம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களினால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அவ்வாறே மில்கோ நிறுவனத்தை மீளமைப்புச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதனால் அக்காணியின் உரிமையை பொறுப்பேற்கும் நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை பால் தொழிற்சாலை அமைந்துள்ள 12 ஏக்கர் காணி மற்றும் இன்னும் 37 ஏக்கர்களாக 02 காணிகளும் கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்பட்டது. எனினும் 2023 ஆம் ஆண்டு இறுதி வரை இந்த இரண்டு காணிகளுக்குரிய உறுதிகள் மற்றும் திட்ட வரைபடங்கள் கம்பனியிடம் இல்லை. | இது அரசாங்க காணியாகும். இதனை பயன்படுத்தும் உரிமை மாத்திரம் மில்கோ நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்காணியின் முழுமையான உரிமை அரசாங்கத்தினாலேயே மில்கோ நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். இக்காணிகளின் திட்ட வரைபடங்கள் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டு நிறுவனத்திடம் உள்ளது. | காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனிக்குச் சொந்தமான அம்பேவெல, தியன, பொலன்னறுவை ஆகிய தொழிற்சாலைகளில் 05 ஆண்டுகளை மிகைத்த முழு கடன்பட்டோர் மீதி ரூபா 9,313,290 ஆக இருந்ததுடன் இக்கடன் மீதியை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த மீதியில் நீண்ட காலமாக மாற்றமின்றிக் காணப்பட்ட மீதி (Non-Moving) உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அம் மீதிகளை கணக்குகளிலிருந்து நீக்குவதற்குரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு அல்லது அறவீடு செய்ய முடியவில்லையாயின் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்று கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் தலைமை அலுவலகத்தின் 05 ஆண்டுகளை மிகைத்த செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மிதியின் பெறுமதி ரூபா 11,198,640 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,141,873 | இந்த மீதியினுள் நீண்ட காலமாக மாற்றமின்றிக் காணப்படும் மீதி (Non-Moving) உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை கணக்குகளிலிருந்து நீக்குவதற்குரிய அங்கீகாரத்தினைப் | செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு அல்லது அவ்வாறு இல்லையாயின் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான வரவு மீதியும் காணப்பட்டது. மேலும் அம்பேவெல தொழிற்சாலையின் ரூபா 4,591,120 தொகையான செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளும் நடைமுறை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரிய சரிசெய்தலின் மூலம் இந்த கணக்கீட்டு தவறுகள் அடுத்துவரும் ஆண்டுகளில் சரிசெய்யப்படும். | அங்கீகாரத்தினைப் பெற்று கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக 2023 ஆம் ஆண்டிற்கான 2024 நவம்பர் 24 ஆந் திகதியில் பௌதீக மெய்யாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் முறைப்படியாக பராமரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும் கம்பனியால் பேணப்பட்டிருக்காததனால் நிலையான சொத்துக்களின் கிரயம் உள்ளாமை பெறுமானத்தேய்வுக் கணிப்பீடு, நீக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் முதலியவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | சொத்துக்களின் பௌதீக மெய்யாய்வின் பிரகாரம் மீள்மதிப்பிற்குத் தேவையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையான பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் அவற்றினை சரியாக மீளளிப்புச் செய்து கணக்கிடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பனிக்குச் சொந்தமான திகன பால் தொழிற்சாலையில் காணப்படுகின்ற ரூபா 9,500,000 கிரயமான கிருமி நீக்கப்பட்ட பால் போத்தல்களை தயாரிக்கும் இயந்திரம் மற்றும கொழும்பு பால் தொழிற்சாலையின் ரூபா 15,445,587 தொகையான ஐஸ்கிறீம் கோப்பைகளை தயாரிக்கும் இயந்திரம் முறையே 46 சதவீதம் 71 சதவீதம் முதலியவாறாக ஆகக்குறைந்த மட்டத்தில் முறைப்பயன்பாட்டு நிலையில் காணப்பட்டது. | ஒட்டு மொத்த பால் உற்பத்தி குறைவடைவதற்கு நேரொத்த வகையில் கிரமி நீக்கப்பட்ட பால் (Sterilised Milk) போத்தல் தயாரிப்பும் குறைவடந்துள்ளது. அவ்வாறே நாட்டில் காணப்பட்ட பணவீக்கத்தின் காரணமாக ஐஸ்கிறீமிற்காக காணப்பட்ட வேண்டுதல் குறைவடைந்துள்ளதுடன் அதற்கு ஒப்பீடாக ஐஸ்கிறீம் உற்பத்தியையும் மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. | உற்பத்திகளின் சந்தைப்படுத்தலினை மேம்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கிணங்க உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | அம்பேவெல பால் தொழிற்சாலையின் பழைய மற்றும் புதிய உற்பத்தி நிலையங்களின் ஒட்டுமொத்த இயலளவு 9,300,000 லீற்றர்களாக இருந்த போதிலும் 2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சராசரி இயலளவும் பயன்பாடு முறையே 2,675,819 லீற்றர், 1,497,295 லீற்றர் மற்றும் 1,092,820 லிற்றர் ஆக இருந்ததடன் அது முழு இயலளவில் 29 சதவீதம் 16 சதவீதம் மற்றும் 12 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பசும் பாலை சேகரித்தல் குறைவடைவதற்கு நேரொத்த வகையில் உற்பத்தியும் குறைவடைந்துள்ளது. | பசும் பாலை சேகரிப்பதற்கு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் அங்கீகரித்த ஆளணியினர் 1578 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான ஆளணியினர் 1242 ஆகும். விபரம் பின்வருமாறாகும். | | |

| | அங்கீகரித்தது | உள்ளபடியானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 80 | 63 | 17 |
| முன்றாம் மட்டம் | 133 | 118 | 15 |
| இரண்டாம் மட்டம் | 529 | 394 | 135 |
| ஆரமப மட்டம் | 836 | 667 | 169 |
| | 1578 | 1242 | 336 |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கான சிரேஸ்ட மட்டத்தின் அங்கீகரித்த பதவிகள் 80 ஆக இருந்ததுடன் உள்ளபடியான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்ததனால் 17 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. அந்த பதவிகளுக்கு மத்தியில் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் திட்மிடல் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்ட மற்றும் பொறியியல் முகாமையாளர்கள் ஆகிய பதவிகளுக்காக அங்கிகரித்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 01 ஆக இருந்த போதிலும் அதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | அரசாங்கத்தின் மூலம் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வது சம்பந்தமாக மட்டுப்பாடுகள் விதித்தலும் பின்னர் மில்கோ கம்பனியை மீள்கட்டமைப்புச் செய்வது தொடர்பாக அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் காரணமாக அங்கீகரித்த பதவிகளுக்காக கடமைகளை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும் உள்ளக சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் புதிய உற்பத்திகள் மற்றும் அபிவிருத்தி பிரிவிற்கு ஒரு முகாமையாளர் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்படாததன் காரணமாக அங்கீகரித்த பதவியான உதவி முகாமையாளர் செயற்திட்டம் மற்றும் பொறியியல் ஆகிய பதவிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கம்பனியின் மூன்றாம் மட்டத்திலுள்ள 04 பதவிகளான பொறியியலாளர், பால் அபிவிருத்தி மற்றும் கொள்வனவு செய்தல் உத்தியோகத்தர், திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் உத்தியோகத்தர் மற்றும் தரச் சான்றுதல்படுத்தல் உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக அங்கிகரித்த ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 07, 02, 10 மற்றும் 01 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 10, 03, 12 மற்றும் 02 ஆக இருந்ததனால் அந்த பதவிகளில் ஊழியர்கள் 03, 01, 02 மற்றும் 01 ஆக மிகையாக சேவையில் ஈடுபட்டுள்ளனர் என அவதானிக்கப்பட்டதுடன் அப்பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் குறுங்கால எல்லைக்குள் இராஜினாமா செய்யும் போக்கு அவதானிக்கப்பட்டதனாலும் மிகை ஆளணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டள்ளனர். துற்பொழுது மிகையான ஊழியர்கள் ஏனைய செயற்திறனான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக தேவையான அங்கீகாரத்தினை முறைப்படியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் அங்கீகரித்த ஆளணியில் இருக்கின்ற மூன்றாம் மட்டத்திலுள்ள 02 பதவிகளான தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் அளவிட்டு நில அளவையாளர் ஆகிய பதவிகளும் ஆரம்ப மட்டத்திலுள்ள மோட்டார் மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆரம்ப கட்டத்திலுள்ள ஒரு பதவியினை மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கை 22 ஆக இருந்த போதிலும் அதற்காக நிரந்தர அடிப்படையில் 25 ஊழியர்கள் சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பதில்கடமை பார்க்கும் அடிப்படையிலும் ஒரு ஊழியர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிக்காக நான்கு மிகை ஊழியர்கள் (பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியருடன்) கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆதவைப்பாட்டின் அடிப்படையின் கீழ் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக தேவையான அங்கீகாரத்தினை முறைப்படியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக மற்றும் வெளியக காரணிகளை கவனத்திற்கு எடுத்து மீண்டுவரும் மற்றும் மூலதனம் ஆகிய இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைச் சாத்தியமாக வருமானங்கள் மற்றும் செலவுகளை உள்ளடக்கி வருடாந்த கணக்கு படிவத்திற்கிணங்கிய வகையில் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுக்கூற்றுக்கள் ஐந்தொகை காசுப்பாய்ச்சல்கூற்று என்பவைகளை உள்ளடக்கும் வகையில் பாதீடு தயாரிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க கம்பனியால் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தும் அது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 5.2 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் 2030 ஆம் ஆண்டளவில் தமது அமைப்பினைச் சார்ந்த அனைத்து நாடுகளின் பொருளாதார மேம்பாகும். சமூக அபிவிருத்தியும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு இணங்கும் வகையில் எதிர்பார்த்த 03 குறிக்கோள்களின் கீழ் 05 இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றும் போது 2023 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட 02 இலக்குகளின் செயல் முன்னேற்றமானது திட்டமிட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சிறிய அளவிலான விவசாய தொழில் முயற்சி பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் மில்கோ நிறுவனத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊவா, மத்திய, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 3000 பால் பண்ணையாளர்களின் செயற்றினை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2025 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் முழுச் செயற்திட்டத்தில் 17% மும் அம்பேவெல தொழிற்சாலையின் மின் வலுவினை தொடர்ச்சியாக வழங்குவதற்காக UPS இயந்திரத்தினைப் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. | திட்டமிட்டவாறு உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |